# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.36] CHENNAI WEDNESDAY, SEPTEMBER 21,2011**

**Purattasi 4, Thiruvalluvar Aandu-2042**


## Part VI --- Section 2

(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**( அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./மி.வி (SC) / 7–28, 05–09–2011 நாளிட்டது )**

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பைக் குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும், மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள மின்நுகர்வுக் கட்டணத்தை முன்னதாகவே செலுத்துவதற்கு தெரிவு செய்துள்ள நுகர்வோருக்கு வட்டி வழங்குவது பொறுத்து ஒரு சில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் ;

மற்றும் மேலேயுள்ள திருத்தத்தை செயற்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு ஒருசில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்தைய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், (இதன்பின்பு இதில் “முதன்மை விதித்தொகுப்பு” என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தத்தை செய்துள்ளது :–

**<u>2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு</u>**

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

a) இந்த விதித்தொகுப்பு, 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்படும்.

b) இது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. **16ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் .—**

முதன்மை விதித் தொகுப்பில் 16ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும் ,—

<u>“16. மின்கட்டணங்களை முன்னதாகச் செலுத்துவதற்கான தெரிவுரிமை.</u>

*மின்கட்டணங்களை முன்னதாகச் செலுத்துவதற்கு தெரிவு செய்துள்ள மின்நுகர்வோர் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வைப்பீடுகள், மின்நுகர்வோர் மின்அட்டையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய முன்பணத்தொகைக்கான வட்டியானது, வங்கி வீதத்தில் அல்லது ஆணையத்தினால் குறித்துரைக்கப்படும் வீதத்தில் மீதமுள்ள முன்வைப்பு தொகையில் கணக்கிடப்படுதல் வேண்டும் மற்றும் மின்நுகர்வோரின் பேரேட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் ”.*

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**(சி. குணசேகரன்)**
செயலாளர்